**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | **57/2018** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | சாவித்திரி | CASTE | : | |
| W/O | நாராயணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | அலங்காநல்லூர் –புதுப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2026**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. என்னுடைய மாமனார் பெயர் வேலு ஆசாரி. எனது மாமனாருக்கு 3 மகன்கள். மேற்படி 3 மகன்களும் அழகம்மாள் என்ற முதல் தாரத்திற்கு பிறந்தவர்கள். வழக்குச்சொத்துக்கள் வேலு ஆசாரியின் 2வது மனைவியான அய்யம்மாள் என்பவரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள். அய்யம்மாளுக்கு எந்த வாரிசுகளும் இல்லை. அய்யம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் வழக்குச்சொத்தின் 1 பகுதியை விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது. அய்யம்மாள் கிரையம் பெற்ற பத்திரம் என்னிடமில்லை.

2. அய்யம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் எனது கணவருக்கு எதிராக மதுரை தாலுகா நீதிமன்றத்தில் எனது கணவர் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பதாகவும் அவரை வெளியேற்ற வேண்டும் என்றும் அசல் வழக்கு எண் 151/1992 தாக்கல் செய்தார் என்றாலும் அந்த வழக்கு நடந்து கொண்டிருந்தபோதே அய்யம்மாள் இறந்து அவர் வாரிசாக வேலு ஆசாரி வழக்கை நடத்தி எனது கணவருக்கு எதிராக தீர்ப்பானது என்றால் எனக்குத்தெரியாது.

3. மேற்படி தீர்ப்புக்குப்பின் எனது கணவரும் நானும் வழக்குசொத்தை விட்டு வெளியேறி விட்டோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி எந்த தேதியில் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் தேதி தெரியாது. வழக்குச்சொத்தை நானோ எனது கணவரோ மராமரிப்பு பார்த்ததாக கணக்கு

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் 127A. மற்ற வீடுகளின் கதவு எண்கள் எனக்குத்தெரியாது.

4. தாவா சொத்தின் மின்இணைப்பு எண் எனக்குத்தெரியாது. வேலுமயில் என்பவர் எனது கொழுந்தனார். வேலுமயில் அவரது மனைவி கொடியரசுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும் என்று நீதிமன்ற உத்தரவு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வழக்குச்சொத்தின் 3ல் 1 பங்கு எனது கணவருக்கு உரிமையானது என்று தீர்ப்பாக வில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் கதவு எண் 127/A என்று எந்த வீடும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. சொத்தின் உரிமையாளரான அய்யம்மாளும் அவரது வாரிசான வேலு ஆசாரியும் வழக்குச்சொத்தில் எனக்கு உரிமையில்லை என்று ஏற்கெனவே தீர்ப்பு வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. குருநாதன் என்பவர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 97/2015 ன் விவரம் எனக்குத்தெரியாது என்றால் சரியல்ல. எனது கணவர் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் 3ல் 1 பங்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று உத்தரவானது.

6. மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் கார்டு மற்றும் ரேஷன் கார்டில் கதவு எண் 127/A என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னைத்தாக்கியதாக பொய்யாக போலிசாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் நீதிமன்ற விசாரணையில் எனது கணவர்தான் சாட்சி அளித்தார், நான் அதில் சாட்சியாக இல்லை.

7. நான் தாவா இடத்தில் அனுபவத்தில் இருப்பதுபோல் காண்பிப்பதற்காக மேற்படி புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பாகப்பிரிவினை கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 2 மகள்கள், ஒருவர் இறந்துவிட்டார். மற்றொரு மகளை மதுரையில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். எனது கணவர் சொத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று தீர்ப்பானவுடன் வழக்குச்சொத்தை விட்டு

வெளியேறிவிட்டு எனது மகள் இறந்த காலத்தில் பிரதிவாதியிடம் அனுமதி கேட்டு வழக்கு வீட்டில் குடியிருந்த சமயத்தில் போலி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. அய்யம்மாளும், வேலு ஆசாரியும் எனது கணவருக்கு எதிராக வழக்குசொத்தை விட்டு வெளியேறுமாறு தீர்ப்பு பெற்றுள்ளதாலும் எனது கணவர் அவர்களுக்கு எதிராக செயல்பட்டதாலும் வாரிசு உரிமைப்படி எனது கணவருக்கும் எனக்கும் வழக்குச்சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது மகள் இறந்த காலத்தில் வழக்கு சொத்தில் உள்ள வீட்டில்தான் இருந்தோம். எனது மகள் பாம்பு கடித்து இறந்தார். அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் நாங்கள் வேறு வீட்டில் குடியிருந்தோம் என்றால் சரியல்ல.

9. எனது மகள் இறந்தது சம்பந்தமாக போலிசார் வழக்கு பதியவில்லை. அந்த இறப்புச்சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கொடியரசுவிடம் எனக்கு பேச்சு வார்த்தை உண்டு, அவர் தற்போது திருநகரில் வசித்து வருகிறார். கொடியரசியின் தூண்டுதலின்படியும் இந்த சொத்தை அபகரிக்கவேண்டும் என்றும் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் தற்போது யார் பெயரில் உள்ளது என்று எனக்குத்தெரியாது.

10. அய்யம்மாள் கிரையம் வாங்கிய பத்திரத்தில் 127/A என்று கதவு எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்குத்தெரியாது. எனது கணவரும் அவரது சகோதரரும் பாகம் பிரித்துக்கொண்டதாக எந்தவித ஆவணமும் என்னிடம் இல்லை. உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.